


# பாம்பு தீண்டுதல்
# SNAKE BITE

## தடுப்பு முறைகளும் முதலுதவியும்
## Snake Bite Prevention and Firstaid

தயாரிப்பு உதவி:
**ப. தினேஸ்கரன்**
2008/FM/069
மருத்துவபீட மாணவன் (4ம் வருடம்)
சமுதாய மருத்துவத்துறை
மருத்துவபீடம் - யாழ்ப்பாணம்.

வெளியீடு:
**சுகாதார கல்விசார் தயாரிப்பு அலகு,**
**சமுதாய மருத்துவத்துறை,**
**மருத்துவபீடம் - யாழ்ப்பாணம்.**

# அறிமுகம்

பாம்பு தீண்டுதலினால் மரணம் அடைவோரின் வீதத்திலே முதலிடத்தில் நிற்கும் உலக நாடுகளில் இலங்கையும் ஒன்று. இது நாளொன்றுக்கு இரண்டு வீதமெனக் கணிக்கப்படுகின்றது.

விஷப் பாம்புகளினால் தீண்டப்படுபவர்களின் உடலில் எப்பொழுதும் விஷம் செறிந்து விடுவதில்லை. விஷக்கடிக்கு ஆளானவரிடம் விஷம் செறிந்ததற்கான அறிகுறிகள் காணப்பட்டால் மாத்திரமே இந்த சிகிச்சை முறை அறிமுகப்படுத்தப்படும்.

## சில முக்கியமான குறிப்புகள்:

1. எல்லாப் பாம்புகளும் தீண்டுவதில்லை.
2. தீண்டும் பாம்புகள் எல்லாம் நச்சுப்பாம்புகள் அல்ல.
3. எல்லா விஷப்பாம்பு தீண்டுதல்களும் மரணத்தில் முடிவதில்லை.

இலங்கையிலுள்ள எல்லா வைத்தியசாலைகளிலும் பொதவாகப் பிரதி விஷ மருந்துகளைக் கையிருப்பில் வைத்திருப்பதுடன், அதன் பாவிப்பைத் திறமையுடன் அளிக்கவல்ல உத்தியோகத்தரும் உள்ளனர்.

## விஷப்பாம்புகள்

இலங்கையில் 93 வகைப்பாம்புகள் உண்டு. இவற்றில் அனேகமானவை தீங்கு விளைவிக்கமாட்டா. இலங்கையில் பாம்பு தீண்டுதலினால் ஏற்படும் அனேக மரணங்களும், நிலத்தில் வாழும் ஐந்து இன அதீக விஷமுடைய பாம்புகளின் நான்கு இனங்களினாலேயே ஏற்படுகின்றன. அவையாவன:

1. கண்ணாடிப்புடையன்
2. நாக பாம்பு
3. எண்ணெய் விரியன்
4. எட்டடி விரியன் என்பனவையாகும்.

ஐந்தாவது இனமாகிய சுருட்டைப்பாம்பு, அதிக விஷம் உடையதாக உள்ளபோதும் இதனால் இலங்கையில் மரணமடைந்தோர் பற்றி எவ்வித அறிக்கையும் இல்லை.

கரையோர நீர்ப்பகுதிகளிலே பதின்மூன்று இனக்கடற்பாம்புகளே இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவையாவும் அதிக விஷம் கூடியவை. எனினும் இலங்கையில் குறிப்பாக இவற்றால் மரணம் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை. ஒரேயொரு மரணம் ஏற்பட்டிருப்பதாக ஒரு அறிக்கை உண்டு.

சாதாரண அல்லது குறைந்த விஷமுள்ள பாம்புகளில் (இணைப்பு - அட்டவணை (2) இரண்டு இனங்கள் முக்கிய கவனத்திற்கு எடுக்கப்பட வேண்டியவை. அவை:

1. கோணல் மூக்குப்புடையன்
2. பச்சைப்பாம்பு என்பவை.

இலங்கையிலே மூக்குப்புடையன் பாம்பு தீண்டுதலினால் இருவர் இறந்ததாகவும், பச்சைப்பாம்புகள் தீண்டுதலினால் இறப்புக்கள் ஏற்படவில்லை என்றும் கூறப்படுகின்றது. இத்தீவில் காணப்படும் வேறு பல இனப்பாம்புகள் விஷம் குறைந்தவை. இந்த இனத்தில் சாரைப்பாம்பு, போயிகா, மாபிலா (Boigz, Mapila) என்பவை அடங்கியுள்ளன. இலங்கையில் இவை அதிக விஷத்தைக் கொண்டுள்ளதாகக் தவறான மதிப்பீடு உண்டு. இவற்றின் தீண்டுதலினால் நோவும், வீக்கடும் உண்டாகுமே தவிர மரணம் ஏற்பட்டதாகக் குறிப்புகள் எவையும் இல்லை.

## பாம்பை இனங்காணுதல்

### 1. நாக பாம்பு

- படம் எடுக்கும் தன்மை கொண்டது
- படம் எடுக்கும் பொழுது பின்புறத்தில் வடிவம் காணப்படும்
- முன்புறத்தில் 2 கரிய புள்ளிகள் காணப்படும்
- "உஷ்" எனும் ஒலி எழுப்பும்

## 2. எட்டடி விரியன்

- கறுப்பு நிறமுடையது
- வெள்ளை நிறத்திலான ஒற்றை வரி கொண்ட வளையங்கள் முதுகுப்புறம் மற்றும் பக்கப்புறங்களில் காணப்படும்
- வயிற்றுப்புறத்தில் கறுப்பு நிற வளையங்கள் காணப்படும்.

## 3. எண்ணெய் விரியன்

- மினுமினுப்பான கரு நீல நிறமுடையது.
- வெள்ளை நிறத்தினாலான இரட்டை வரிகள் கொண்ட வளையங்கள் முதுகுப்புறம் மற்றும் பக்கப்புறங்களில் காணப்படும்.
- வயிற்றுப்புற பகுதியில் குறுக்குக் கோடுகள் காணப்பட மாட்டாது.
- வயிற்றுப்புறம் மினுமினுப்பான வெள்ளை நிறமுடையதாக காணப்படும்.

## 4. கண்ணாடி விரியன்

- முக்கோண வடிவ தலையுடையதாக காணப்படும்.
- தலையின் மேற்பகுதியில் தலைகீழான "ஏ" வடிவம் காணப்படும்.
- மண்ணிறமுடைய நீள் வட்டங்களை கொண்டமைந்த 3 வரிகள் நீளப்பாடாக காணப்படும்.


## 5. சுருட்டைப் பாம்பு

- கூரியசெதில் போன்ற அமைப்பு முதுகுப்புறமாகவும் பக்கப்புறமாகவும் காணப்படும்.
- தலையின் மேற்பகுதியில் பறவையின் கால் வடிவிலமைந்த வெள்ளை நிறமுடைய வடிவம் காணப்படும்.

1. Ceylon cobra(Naja naja naja)

   Tamil: நாகபாம்பு, நல்லபாம்பு


   Sinhala: නයා, නාගයා




2. Ceylon krait(Bungarus ceylonicus)

   Tamil : எட்டடி விரியன்

   Sinhala: පොලොන් කරවලා




3. Common (Indian) krait(Bungarus caeruleus)

   Tamil: எண்ணெய் விரியன்


   Sinhala: තෙල් කරවලා, මගමරැවා



4. Russells' viper(Vipera russelli)

Tamil: கண்ணாடி விரியன்


Sinhala: තිත් පොලඟා



5. Saw - scaled viper(Echis carinatus)

Tamil: சுருட்டை பாம்பு (மணல் சுருட்டை)


Sinhala: වැලි පොලඟා



6. Green pit viper(Trimeresurus trigonocephalus)


Tamil : கோப்பி விரியன்ஃபச்சை விரியன்

Sinhala : පලා පොලඟා



7. Hump nosed viper(Hypnale Hypnale)

Tamil: கூனல் மூக்குப்புடையன்



# தடுப்பு முறைகள்

மக்கள் குடியிருக்கும் இடங்களிலேயே பாம்புகள் சாதாரணமாகக் காணப்படுகின்றன. பாம்புகளின் ஸ்பரிசம் ஏற்படக்கூடிய மக்கள் சில தடுப்பு முறைகளைக் கையாளுவதன் மூலம் இந்நாட்டில் பாம்பு தீண்டுதலைக் குறைத்துக் கொள்ளலாம். பின்வரும் நடவடிக்கைகளைக் கையாளவும்.

1. கால்களிலேயே அதிகமாகப் பாம்பு தீண்டுதல்கள் ஏற்படுகின்றன. எனவே பாம்புகள் காணப்படக்கூடிய இடங்களிலே நடக்கும்போதோ, வேலை செய்யும் போதோ சப்பாத்து அல்லது கணுக்கால்வரை நீளமுள்ள ஆடைகளை அணிந்து கால்களையும் பாதங்களையும் பாதுகாத்துக் கொள்ளவும்.

2. பாம்புகள் செறிந்திருக்கும் பகுதிகளில் நடக்கும்போது, கையில் ஒரு தடியை ஏந்தி அதனால் வழியில் தென்படும் புல், பற்றை போன்றவற்றை அடித்துக் கொண்டு நடக்கவும். இரவு வேளைகளில் பாம்புகள் மேல் மிதிப்பதை தவிர்க்க வெளிச்சம் ஒன்றை எடுத்துச் செல்லவும்.

3. நிலத்தில் அளுத்திக் கவனமாக நடந்து நீங்கள் கிட்ட நெருங்குவதைப் பாம்புக்கு எச்சரிக்கவும். எனெனில் பாம்பகளிற்கு காற்றில் மிதக்கும் சத்தங்கள் அதிகமாகக் கேட்கமாட்டாது. ஆனால் நிலத்தில் அதிர்ச்சியை அவை இலகுவில் உணருகின்றன.

4. எறும்புப் புற்றுக்கள், அடர்ந்த புதர்கள், மரக்குற்றிகளின் கீழ்ப்பக்கங்கள், மரப்பொந்துகள் போன்றவற்றினுள் கவனயீனமாகக் கையை வைக்காதீர்கள்.

5. பாம்புகள் உணவிற்குத் தேடிச் செல்லும் எலி, தவளை, பல்லி போன்றவற்றை வரவிடாது வீட்டையும், சுற்றாடலையும் குப்பை கூழங்களை முறையாக அகற்றி சுத்தமாக வைத்திருங்கள்.

பாம்புகள் பற்றி சிறந்த அறிவுள்ளவர்களே பாம்புகளைக் கையாளவோ, வளர்க்கவோ வேண்டும். இறந்தது போன்று காணப்படும் பாம்பையும் மிகக் கவனமாகக் கையாள வேண்டும். ஏனெனில் அது இன்னும் உயிருள்ளதாக

இருக்கக்கூடும். அத்துடன் இறந்து இருப்பினும் அனிச்சையாகக் (Reflex) கடிக்கவும் கூடும்.

## பாம்பு தீண்டுதலின் முதலுதவி

பாம்பு தீண்டுதலுக்கு ஆளானவர்களுக்கு நற்பலன் அளிக்கக் கூடிய முதலுதவி அளிக்கப்பட வேண்டும். அது:

- உடல் அமைப்புள் செலுத்தப்பட்ட விஷம் பரவுவதைத் தடுக்கவோ, குறைக்கவோ
- தீண்டுதலினால் எற்படக்கூடிய சிக்கல்களைத் தடுக்கவோ, குறைக்கவோ உதவும்.

இதற்கு கீழ்வரும் எளியதும் இலகுவில் செய்யக்கூடியதும், பயனளிக்க கூடியதும், கெடுதல் இல்லாததுமான வழிகள் சிபாரிசு செய்யப்பட்டுள்ளன.

1. பாம்பு தீண்டுதலைத் தொடர்ந்து, தீண்டப்பட்டவருக்கு பொதுவாக உண்டாகும் பிரதிபலிப்பு பயமாகும். அவர் மரணம் ஏற்படுமென எதிர்நோக்குகின்றார். அந்த நிலை ஏற்படாது என்பதை அவருக்கு உறுதிப்படுத்துவது அவசியம். இதை நம்பிக்கை ஊட்டக் கூடிய முறையிலும் தேவையுள்ள வரையும் தொடர வேண்டும். இதற்காகப் பின்வரும் முக்கிய விடயங்களை அழுத்திச் சொல்ல வேண்டும்.

- அநேக பாம்புகள் விஷமுள்ளவைகள் அல்ல.
- தீண்டிய பாம்பு விஷமுள்ளதாக இருந்தாலும் அது விஷத்தை உட்செலுத்தாமல் இருக்க முடியும். பல் அடையாளம் இருந்தாலும் விஷம் உடலினுள் புகுந்துவிட்டது எனக் கருதலாகாது.
- விஷம் உட்புகுந்து விட்டாலும் வைத்திசாலைகளில் நற்பலனளிக்கக் கூடிய சிகிச்சை முறையுண்டு. இது பூரண குணத்தை தரவல்லது.

2. பாம்பினால் தீண்டப்பட்டவரை, பிரதானமாக தீண்டப்பட்ட அவயத்தை அசைவற்ற நிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில்:

- தீண்டப்பட்ட உறுப்போ, உடலோ அசைந்தால் அதன் பயன்,

உட்புகுத்தப்பட்ட விஷம் உடலினுள் விரைவாகச் செறிவடையும். எனவே தீண்டுதலுக்குப் பலியுண்டவரை அசையாது வைத்திருக்க வேண்டும். அவரை நடத்திச் செல்வதிலும் பார்க்க தூக்கிச் செல்வதே சிறந்தது.

- அசையாமல் இருப்பதால் விஷச் செறிவின் வேகம் குறைவடைவதுடன் நோவும் குறைகிறது. ஒரு துண்டுப்பலகை போன்ற கடினமான பொருளின் மேல் தீண்டப்பட்ட உறுப்பை வைத்துக்கட்டி உறுப்பை அசையாது வைத்திருக்கலாம்.

3. உடலின் கடிவாயிலில் தோலின் மேல் இருக்கும் விஷத்தை அகற்றுவதற்கு, அவ்விடத்தை சவர்க்காரமும், நீரும் பாவித்து மெதுவாகக் கழுவ வேண்டும் அல்லது ஒரு ஈரச் சேலையால் துடைக்க வேண்டும்.

4. விஷப்பாம்பு தீண்டுதலுக்குப் பின், தீண்டப்பட்ட உறுப்பு வீங்குவது ஒரு சாதாரண அம்சமாகும். அப்படி வீக்கம் ஏற்படின், அதனால் ஏற்படக்கூடிய பிரச்சினையைத் தடுப்பதற்கு இறுக்கமேற்படுத்தக்கூடிய மோதிரம், வளையல், பாதஸரம், கயிறு அல்லது உடுப்பு போன்றவற்றை அகற்ற வேண்டும்.

5. வலியை அகற்ற "பரசிற்றமோல்" (Paracetamol) கொடுக்கலாம்.

6. பாம்பு தீண்டுதலுக்கு உள்ளானவரை முடியுமான விரைவில் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவும். தீண்டிய பாம்மை உயிருடனோ அல்லது உயிரற்றதாகவோ, நோயாளியுடன் வைத்திசாலைக்குக் கொண்டு போவது புத்திசாலித்தனமாகும். இதனால் வைத்தியர் பாம்பை இனங்கண்டுகொள்ள முடிகிறது. இதேவேளையில் உயிருள்ள பாம்புகளை அவதானத்துடன் கையாள வேண்டும்.

## தவிர்க்கப்பட வேண்டிய சில.

1. தீண்டப்பட்ட காயத்தைக் கூரிய கத்தியால் வெட்டுவதோ அல்லது உறிஞ்சும் முறையைக் கையாளுவதோ புத்தியற்ற செயலாகும். அனுபவமற்ற முறையில் கத்தியால் வெட்டுவதால் தசைநார், இரத்தக்குழாய்கள், நரம்புகளுக்கு சேதத்தை ஏற்படுத்த நேரிடலாம். இந்தக் காயங்களிலிருந்து

இரத்தப் பெருக்கு ஏற்படின் அது இன்னும் பாரியளவு விளைவுகளை ஏற்படுத்தும்.

2. முதற்சிகிச்சை அளிப்பதற்கென பாம்பு தீண்டுதலுக்கு, காயத்தில் இருந்துவரும் இரத்தப் பெருக்கைத் தடுக்குமுகமாக கயிறு முதலியவற்றால் இறுக்கிக் கட்டுப்போடும் முறை தற்போது சர்ச்சைக்குரியதாக அமைந்துள்ளது. ஏனெனில் அனுபவமற்றவர்கள் இந்த முறையைக் கையாளுவதால் நன்மையிலும் பார்க்க தீமையே அதிகமேற்பட்டுள்ளது. எனவே இப்போது இம்முறையைச் சிபார்சு செய்வதில்லை.

3. கொண்டிஸ் படிகங்களைப் போன்ற இரசாயனப் பொருட்களை காயத்தின் மேல் பாவிக்கக் கூடாது. இவை பயனற்றவை. அத்துடன் தசை நார்களையும் சேதப்படுத்தக் கூடியவை.

4. மூக்கின் வழியில் எண்ணெய் போன்ற திரவப் பதார்த்தங்களையும் புகுத்திச் சிகிச்சையளிப்பது ஆபத்து ஏற்படுத்துமாதலால் இம்முறையைக் கையாளக் கூடாது. ஏனெனில் இதனால் சுவாசப்பையில் நோய்கள் ஏற்படவும், நிரந்தரமான செவிட்டு நிலை ஏற்படவும் இடமுண்டு.

5. மதுபானம் விஷத்தை உடலில் விரைவில் செறியச் செய்யுமாதலால் அதைக் கொடுக்கக்கூடாது.

6. இளநீர், செவ்விளநீர், பழரசங்கள் என்பவற்றைக் கொடுக்கக் கூடாது. பாம்பு தீண்டுதலினால் சிறுநீரகத்தில் சேதமேற்பட்டால் இவற்றிலுள்ள பொற்றாசியமெனப்படும் ஒருவகை உப்பு மேலும் பிரச்சினைகளை ஏற்படுத்த முடியும்.

7. அஸ்பிரின் (Asprin) வயிற்றிலே இரத்தக் கசிவை ஏற்படுத்தும். பிரதானமாக கண்ணாடிப்புடையன் தீண்டியதன் பின் இது கொடுக்கக் கூடாது.

8. பயத்தினால் தீங்கு விளைவிக்கக் கூடிய செயல்களுக்குத் தூண்டப்படாதீர்கள்.